செய்தி வெளியீடு எண்: 10 நாள்: 09.08.2019

**தேனி மாவட்டம்,**
**தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில்**
**கவிதைப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற**
**கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகையினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார் :-**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்ற கவிதைப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.08.2019) வழங்கினார்.

தமிழக அரசின் உத்தரவின்படி, தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் 2003-04-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் கல்லூரி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையே தமிழில் படைப்பாற்றலையும் பேச்சாற்றலையும் வளர்த்திடும் வகையில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டிகளில், கலந்து கொண்டு மாவட்ட அளவில் முதல் இடத்தினை பெறும் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.10,000/-மும், இரண்டாம் இடத்தினை பெறும் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.7,000/-மும், மூன்றாம் இடத்தினை பெறும் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.5,000/-மும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்ற கவிதைப்போட்டியில், தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவி ஜெ.மகேஸ்வரி முதலிடத்தினையும், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் பயிலும் மாணவன் ஐ.முரளிதரன் இரண்டாமிடத்தினையும், தேனி கம்மாவர் கல்வியியல் கல்லூரியில் பயிலும் மாணவன் சீ.கு.விக்னேஷ் மூன்றாமிடத்தினையும், கட்டுரைப் போட்டியில் உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் பயிலும் மாணவி ஏ.சொரூபராணி முதலிடத்தினையும், கம்பம் ஆதி சுஞ்சனகிரி மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவி ஜெ.சிந்துஜா இரண்டாமிடத்தினையும், ஆண்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவி வே.சிவநாகேஸ்வரி மூன்றாமிடத்தினையும், பேச்சுப் போட்டியில் கோட்டூர் அரசு பல்வகைத் தொழிநுட்ப கல்லூரியில் பயிலும் மாணவன் இரா.தவமணி முதலிடத்தினையும், தேனி கம்மவார் சங்க கல்லூரியில் பயிலும் மாணவி து.ஜெபகேத்ரின் இரண்டாமிடத்தினையும், தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவி மா.இராகவி மூன்றாமிடத்தினையும் பெற்றனர்.

இப்போட்டிகளில், கலந்து கொண்டு முதலிடத்தினை பெற்ற 3 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.10,000/-த்திற்கான பரிசுத்தொகையினையும், இரண்டாம் இடத்தினை பெற்ற 3 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.7,000/-த்திற்கான பரிசுத்தொகையினையும், மூன்றாமிடத்தினை பெற்ற 3 மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.5,000/-த்திற்கான பரிசுத்தொகையினையும் என மொத்தம் 9 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.66,000/-த்திற்கான பரிசுத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் பெ.இளங்கோ, உதவியாளர் க.பாப்பாலெட்சுமி, பள்ளி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**